Registered as a Newspaper　　பக்கங்கள் 04　　விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　மக்கள் தினசரி　　Peoples Daily

நாதம் 04　　திருவள்ளுவர் ஆண்டு 2024　　புரட்டாதி 20　　[06-10-1993]　　புதன்கிழமை　　ஓசை 230

## கல்வி மேம்பாட்டு பேரவையினரின் ‘விளக்கு’ மாத இதழ் இன்று வெளியீடு

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ‘‘விளக்கு’’ மாத இதழ் வெளியீட்டு விழா இன்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இவ்விழா தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் துணைத் தலைவர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் தேசியக் கொடி ஏற்றல், மங்கள விளக்கேற்றல், தமிழ் மொழி வாழ்த்தை யடுத்து வரவேற்புரையை பேரவை செயலாளரும், அரசியல் துறை பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனும் நிகழ்த்துவர். முதற் பிரதியை தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை தலைவர் அருட்திரு. பிரான்சிஸ் யோசப் அடிகளார் வழங்கவுள்ளார். ‘விளக்கு’ மாத இதழின் முதலிதழை வேம்படி மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் செல்வி இ. இராசரத்தினம் மயிலிட்டி கலைமகள் (4ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிக்கு அரசு தயாராயில்லை

# தமிழ் மக்கள் போராடியே ஆகவேண்டும்

## இணைந்து செயற்பட வருமாறு விடுதலைப் புலிகள் கோரிக்கை

**பேச்சும் இல்லை சமாதானமுயற்சிகளும் இல்லை என்று அரசே திட்டவட்டமாக வெளிப்படையாக அறிவித்து விட்டது. படையெடுப்புகள், இராணுவ அணுகுமுறைகள் மூலமே இனப்பிரச்சினையை கையாள அரசும், படைத்துறைத் தலைமையும் ஏகோபித்த முடிவை எடுத்துவிட்டன. இந்தக் கடும்போக்கை சிங்கள தேசத்தின் அனைத்துத் தரப்பினருமே அங்கீகரித்தும் விட்டனர். இந்த நிலையில் அமைதி வழிமுறையில் தீர்வு கிடைக்கும் என்ற எண்ணப்பாட்டை கைவிட்டுவிட்டு ஆயுதம் ஏந்திப் போராடி எம்மை நாமே பாதுகாத்துக்கொள்வதுடன் எமது மண்ணையும் எதிரியின் பிடியிலிருந்து விடுவிக்கப் பாடுபடுவோம். இந்த உன்னத நோக்கத்திற்காக ஆயுதப் போரில் இணையும்படி எமது இளைஞர்களையும் - இளம் பெண்களையும் நாம் அன்புடன் அழைக்கின்றோம். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

**இவ் அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:**

இன்று தமிழ் மக்கள் ஒரு நெருக்கடியானசூழ்நிலையைச் சந்தித்துள்ளனர்.

இனஅழிப்பையேநோக்காகக் கொண்ட சிங்களப்படைகளின் மூர்க்கத்தனமான தாக்குதல்களுக்கு பொதுமக்கள் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பாடசாலைகள், ஆலயங்கள், சந்தைகள், வீடுகள் என்று பொதுமக்கள் நிலைகள் மீது கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களையும் எறிகணைகள் மற்றும் பீரங்கி குண்டுத் தாக்குதல்களையும் சிங்களப் படைகள் தீவிரப்படுத்தியுள்ளன.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் இவ் விதமான குண்டுத் தாக்குதல்களில் 53 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 98 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பொது மக்களை இலக்காகக் கொண்டபெரும்போர் ஒன்றை சிங்களப்படைகள் ஆரம்பித்துவிட்டன என்பதையே கண்மூடித்தனமான இக் குண்டுத் தாக்குதல்கள் கோடிகாட்டுகின்றன.

முறைப்படுத்தி, பொதுமக்களை துன்புறுத்த, நினைத்த சிங்கள அரசின் எண்ணம் கைகூடவில்லை.

இதே போன்று தான் முன்னரும் குடாநாட்டுடனான தரைப்பாதைகளை ஆக்கிரமித்த சிங்கள அரசு; தமிழ் மக்கள் மீது விதித்த பொருளாதாரத் தடையை மேலும் இறுக்கி பொதுமக்களை துன்புறுத்த விரும்பியது

### கிளாலியூடான பயணம் சிங்கள அரசிற்கு சவால்

எனினும் கிளாலி கடல் பாதையூடாக மக்கள் பயணம் போய் தங்களது வாழ்க்கைப் பொருதுகளமாக மாறியது.

பொதுமக்களின் படகுகளை அழிப்பதையே இலக்காகக்

## பன்னிரு வேங்கைகளுக்கும் நேற்று உணர்வுபூர்வ அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

இந்திய இலங்கை அரசுகளின் கூட்டுச்சதிக்குப் பலியாகிய லெப்டினன்ட் கேணல் புலேந்திரன், லெப்டினன்ட் கேணல் குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகளினதும் ஆறாம் ஆண்டு நினைவுநாள் நேற்று குடாநாடு முழுவதும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இப் பன்னிரு வேங்கைகளதும் நினைவாக யாழ். குடாநாடு முழுவதும் வாழும் மக்கள் நேற்று தமது உணர்வு பூர்வமான அஞ்சலியைச் செலுத்தினர்.

பன்னிரு வேங்கைகளினதும் உருவப்படங்கள் நேற்று குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் பொது மக்கள் கூடும் இடங்கள் மற்றும் சகல அலுவலகங்கள் ஆகியவற்றிலும் வைக்கப்பட்டு மலர் மாலைகள்சூட்டியும் மலர்கள் தூவப்பட்டும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இவற்றைவிட இவ் வேங்கைகளது ஆறாம் ஆண்டு நினைவை நினைவு கூரும் வகையிலான வாசகங்களைத் தாங்கிய பதாகைகள் பிரதான வீதிகளின் குறுக்காகக் கட்டப்பட்டிருந்தன.

இவ் அஞ்சலி நிகழ்வின் முக்கிய நிகழ்வு வடமராட்சியில் நடைபெற்றது.

வல்வெட்டித்துறை தீருவில் மைதானத்தில் பன்னிரு வேங் [4ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சியே கிளாலியை கைவிட்டுச் சென்றனர்

### பி. பி. ஸி. தெரிவிப்பு

(லண்டன்)

இராணுவ முக்கியத்துவம் மிக்க கிளாலி இறங்கு துறையிலிருந்து இராணுவத்தினர் வெளியேறிவிட்டனர் இவ்வாண்டின் மிகப்பெரிய தாக்

க்க இராணுவம் திட்டமிட வேண்டும் அல்லது சில மாதங்களின் பின்பே நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவ் வீடைவெளியை புலிகள்பயன்படுத்த முற்படலாம். இத

மாக இயங்குகின்றன. கொழும்பில் புலிகள் தாக்கலாம் என இராணுவம் அஞ்சுகிறது போல் தெரிகிறது எனவும் பி. பி. ஸி. கொழும்பு செய்தி

அங்கீகரித்தும் விட்டனர். இந்த நிலையில் அமைதி வழிமுறையில் தீர்வு கிடைக்கும் என்ற எண்ணப்பாட்டை கைவிட்டுவிட்டு ஆயுதம் ஏந்திப் போராடி எம்மை நாமே பாதுகாத்துக்கொள்வதுடன் எமது மண்ணையும் எதிரியின் பிடியிலிருந்து விடுவிக்கப் பாடுபடுவோம். இந்த உன்னத நோக்கத்திற்காக ஆயுதப் போரில் இணையும்படி எமது இளைஞர்களையும் - இளம் பெண்களையும் நாம் அன்புடன் அழைக்கின்றோம். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இவ் அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

இன்று தமிழ் மக்கள் ஒரு நெருக்கடியான சூழ்நிலையைச் சந்தித்துள்ளனர். இனஅழிப்பையே நோக்காகக் கொண்ட சிங்களப்படைகளின் மூர்க்கத்தனமான தாக்குதல்களுக்கு பொதுமக்கள் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பாடசாலைகள், ஆலயங்கள், சந்தைகள், வீடுகள் என்று பொதுமக்களின் நிலைகள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களையும் எறிகணைகள் மற்றும் பீரங்கி குண்டுத் தாக்குதல்களையும் சிங்களப் படைகள் தீவிரப்படுத்தியுள்ளன.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் இவ் விதமான குண்டுத் தாக்குதல்களில் 53 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 98 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பொது மக்களை இலக்காகக் கொண்ட பெரும்போர் ஒன்றை சிங்களப்படைகள் ஆரம்பித்துவிட்டன என்பதையே கண்மூடித்தனமான இக் குண்டுத் தாக்குதல்கள் கோடிகாட்டுகின்றன.

## பூரண பொருளாதார தடை அரசின் நோக்கம் அதுவே

இதன் ஒரு அங்கமாகவே 'யாழ்தேவி' என்ற பெயரில் சிங்களப்படைகள் ஓர் இராணுவ நடவடிக்கையைச் செய்து, கிளாலிப்பகுதியை ஆக்கிரமித்து, பொது மக்களின் போக்குவரத்தை அடியோடு துண்டிக்கமுயன்றன.

ஆனால் இப் படையெடுப்பில் சிங்களப் படைகள் சந்தித்த பேரிழப்புகள் அதன் நோக்கத்தையே சிதைத்துவிட்டது. அதனால் ஆக்கிரமித்த கிளாலிப்பகுதியை விட்டு பின்வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் சிங்களப்படைத்துறைக்கு ஏற்பட்டது.

இதனால் கிளாலியில் நிரந்தரமாகத் தரித்து நின்று, பொதுமக்களின் போக்குவரத்தை தடைசெய்து, குடாநாடுமீதான பூரண பொருளாதாரத் தடையை நடைமுறைப்படுத்தி, பொதுமக்களை துன்புறுத்த, நினைத்த சிங்கள அரசின் எண்ணம் கைகூடவில்லை.

இதே போன்றுதான் முன்னரும் குடாநாட்டுடனான தரைப்பாதைகளை ஆக்கிரமித்த சிங்கள அரசு; தமிழ் மக்கள் மீது விதித்த பொருளாதாரத் தடையை மேலும் இறுக்கி பொதுமக்களை துன்புறுத்த விரும்பியது

## கிளாலியூடான பயணம் சிங்கள அரசிற்கு சவால்

எனினும் கிளாலி கடல் பாதையூடாக மக்கள் பயணம் போய் தங்களது வாழ்க்கைப் படகை ஓட்டத் தொடங்கிய போது சிங்கள அரசு; தனது கடற்படையை ஏவிவிட்டு இந்த மக்கள் போக்குவரத்தை தடுத்து நிறுத்த முயற்சி செய்தது.

ஆனால் கடற்புலிகளின் தீவிர செயற்பாடுகளினாலும், துணிகரமான தாக்குதல் முறைகளினாலும் பயணிகளின் படகுப் போக்குவரத்திற்கு பாதுகாப்புகிடைத்தது. இது சிங்களக் கடற்படைக்கு சவாலாகவே அமைந்துவிட்டது.

விளைவு, கிளாலிக் கடல் சிங்களக் கடற்படையினதும் கடற்புலிகளினதும் பிரதான பொருதுகளமாக மாறியது.

பொதுமக்களின் படகுகளை அழிப்பதையே இலக்காகக் கொண்ட சிங்களக்கடற்படைக்கும், பொதுமக்களைப் பாதுகாப்பதையே இலட்சியமாகக் கொண்ட கடற்புலிகளுக்கும் இடையில் தினந்தோறும்கடற் சண்டைகள் நடைபெறத் தொடங்கின.

இறுதியில் 25. 8. 93 அன்று கிளாலிக்கடலில் நடந்தபெரியதொருகடற்சண்டையும்அதன் இறுதியில் நிகழ்ந்த கரும்புலித் தாக்குதல்களும் சிங்களக்கடற்படையை கிளாலிக்கடலில் தூரவிலகியிருக்கச் செய்துவிட்டது.

தனது கடற்படையைக் கொண்டு மக்களின் படகுப்

[4ஆம் பக்கம் பார்க்க]

## எறிகணை வீச்சு ஒருவர் பலி

கடந்த கிழமை பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட எறிகணை வீழ்ந்து வெடித்ததில் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்ககிளை காவலாளி க. கணேசமூர்த்தி (வயது 50, மீசாலை) என்பவர் மரணமானார். இவ்எறிகணை இக்கிளை கடைக்குள் விழுந்ததால் கடையுடன் இடிபாட்டினுள் இவர் அகப்பட்டு மரணமானார் என தெரிய வருகின்றது. (86)

கேணல் குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகளினதும் ஆறாம் ஆண்டு நினைவுநாள் நேற்று குடாநாடு முழுவதும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இப் பன்னிரு வேங்கைகளதும் நினைவாக யாழ். குடாநாடு முழுவதும் வாழும் மக்

உருவப்படங்கள் நேற்று குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் பொது மக்கள் கூடும் இடங்கள் மற்றும் சகல அலுவலகங்கள் ஆகியவற்றிலும் வைக்கப்பட்டு மலர் மாலைகள்சூட்டியும் மலர்கள் தூவப்பட்டும் அஞ்சலி செலுத்தப்

வகையிலான வாசகங்களைத் தாங்கிய பதாகைகள் பிரதான வீதிகளின் குறுக்காகக் கட்டப்பட்டிருந்தன.

இவ் அஞ்சலி நிகழ்வின் முக்கிய நிகழ்வு வடமராட்சியில் நடைபெற்றது.

வல்வெட்டித்துறை தீருவில் மைதானத்தில் பன்னிரு வேங்

[4ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சியே கிளாலியை கைவிட்டுச் சென்றனர்

### பி. பி. ஸி. தெரிவிப்பு

(லண்டன்)

இராணுவ முக்கியத்துவம் மிக்க கிளாலி இறங்குதுறையிலிருந்து இராணுவத்தினர் வெளியேறிவிட்டனர். இவ்வாண்டின் மிகப்பெரிய தாக்குதல் எனக் கருதப்படும் இத்தாக்குதலில் இராணுவம் முன்னேறிய கிளாலிப் பகுதியை தொடர்ந்தும் இராணுவம் வைத்திருந்தால் அதனால் இராணுவமே மேலும் புதிய தாக்குதலுக்கு இலக்காகலாம் என்பதால் படைகள் பின்வாங்கியுள்ளன என்று பி. பி. ஸி. கொழும்பு செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்தேவி என்ற இந்த நடவடிக்கையால் மேலும் பல தமிழ் மக்கள் அகதிகளாகியுள்ளனர். பலர் விமானத் தாக்குதலில் பலியாகியுள்ளனர். புலிகளை போருக்கு வெளியே இழுத்து அவர்களுக்கு இயன்றளவு சேதம் விளைவிப்பதே இந்நடவடிக்கையின் நோக்கம் என அதிகாரிகள் கூறினர். கடந்த ஒரு வருடமாக இராணுவ வெற்றிகள் ஏதுமின்றி வாடியிருந்த கொழும்பு தினசரிகள் யாழ்தேவி நடவடிக்கை பெருவெற்றி என பிரகடனம் செய்து செய்தி வெளியிடுகின்றன. இது வாதத்திற்குரிய விடயம். யாழ்ப்பாணத்தை கைப்பற்ற முயற்சி எடுக்கப்பட்டால் இரு தரப்பிலும் பெரும் சேதம் ஏற்படும் என்பதை யாழ்தேவி நடவடிக்கை காட்டியுள்ளது

அடுத்தமாதம் பருவமழை ஆரம்பிக்கவுள்ளது. இதற்கு முன் புதிய நடவடிக்கை எடுக்க இராணுவம் திட்டமிட வேண்டும் அல்லது சில மாதங்களின் பின்பே நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவ் வீடைவெளியை புலிகள்பயன்படுத்த முற்படலாம். இதனால் தெற்கிலுள்ளஇராணுவ சோதனை நிலையங்கள் தீவிரமாக இயங்குகின்றன. கொழும்பில் புலிகள் தாக்கலாம் என இராணுவம் அஞ்சுகிறது போல் தெரிகிறது எனவும் பி. பி. ஸி. கொழும்பு செய்தியாளர் சுவாக்கா நுவோசு மேலும் தெரிவித்தார்.

## கிளாலி-பூநகரி படகுசேவை விரைவில் ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடற்பரப்பினூடாக மிக விரைவில் பொது மக்களுக்கான போக்குவரத்துப்படகு சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. பூநகரிக்கும் கிளாலிக்குமிடையிலான மேற்படி படகு சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வழமை போல மீண்டும் நடைபெற இருக்கும் இப்படகு சேவை குறித்த கால அட்டவணை மிகக் குறுகிய காலத்தில் அறிவிக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

## காலிழந்தார்

தோட்டத்தை பார்வையிட சென்ற வயோதிபர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி தனது இடது காலை பாதத்துடன் இழந்த சம்பவம் ஒன்றுநேற்று மாலை 5 30 மணியளவில் அளவெட்டி வடக்கு அம்பனைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

## மட்டு. மாவட்டத்தில் இரு புலிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தொப்பிகல காட்டில் விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்றை கடந்த மாதம் 19-ம் திகதி சிறிலங்காஇராணுவத்தினர் சுற்றிவளைத்து நடத்திய தாக்குதலில் விடுதலைப்புலிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாடைந்த வீரவேங்கை கரிகரன் [சிவலிங்கம் கேமச் சந்திரன்-மகிழடித்தீவு கொக்கட்டிச் சோலை]

வீரவேங்கை ஜீவமுரளி] கலைராஜ் [சிவலிங்கம் சுரேஸ் குமார்-6 ம் கட்டை உன்னிச்சை] இவ்விரு போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



வீரவேங்கை கரிகரன்



வீரவேங்கை ஜீவமுரளி

## இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கச்சாய் கடற்கரை பகுதியில் படகொன்றை இழுக்க எத்தனித்த போது மர்மப் பொருளொன்று வெடித்ததில் சகோதரர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளார்கள்.

நேற்று காலை 10-30 மணியளவில் கடற்கரை பகுதியில் இருந்த படகொன்றை தியாகராஜா றஞ்சித் (வயது 23), தியாகராஜா றலீஸ் [வயது 20] ஆகிய இருவரும் இழுக்க முனைந்தபோதே இக்குண்டு வெடித்ததாக தெரிவிக்கப்பட்டது. (பா),(சி)

# இளம் சந்ததியை வளமாக்க ஆசிரியர் சேவை அவசியம்

### கல்வி மேம்பாட்டு பேரவை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''இன்று தமிழீழத் தேசிய எழுச்சி புத்தார்வம் பெற்றிருக்கிறது. தளர்விலா முயற்சி ததும்பி நிற்கிறது. மக்கள் பயமின்றித் தலைநிமிர்ந்து நிற்கின்றனர். நிறைவினை நோக்கி அவர்கள் கரங்கள் நீளுகின்றன. இங்கு விடுதலையின் ஒளியில் தமிழீழம் கண்மலர வேண்டுமானால் கல்வி பெருக்கெடுத்துஓட வேண்டும். அறிவாகிய ஆறு தடையின்றிப் பாய்ந்து; இளம் சந்ததியினரை வளமாக்க வேண்டும். இதற்கு ஆசிரியர்களின் சேவை மிக மிக இன்றியமையாததாகும்.''

இவ்வாறு இன்று கொண்டாடப்படும் உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையின் முழுவிபரமும் வருமாறு;

'ஆசிரியர்' என்னுஞ் சொல் சூழ்ந்த பார்வையுடையோர் எனப் பொருள் பெறும். பண்டைக் காலத்திலே தமிழாசிரியர் 'பார்ப்பார்' எனப்பெயர் பெற்றிருந்ததாகத்தெரிகிறது. 'பார்ப்பார்' என்பது சுத்தமான செந்தமிழ்ச்சொல். ஆசிரியர்களை, உபாத்தியாயர், குரவர், குரு, கணக்காயர் என்றெல்லாம் தமிழ் நூல்கள் சுட்டுகின்றன. ''கல்வியிற் திகழ் கணக்காயர்'' என்று கல்வியிற் பெரிய கம்பராற்புகழப் பெற்றனர் அக்கால ஆசிரியர்கள். இதனால் செந்தமிழ் விளங்கிய நிலமெலாம் வாழ்ந்த பைந்தமிழ் மக்கள் ''எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்று போற்றி மகிழ்ந்தனர். காட்டிலே தவமுதல்வர்கள் வாழ்ந்த இடமெல்லாம் கல்விக் கழகங்களாக அமைந்தன. நாடாண்ட மன்னர்களும் அவர்தம் பின்னவர்களும் இக்கழகங்களிற் சென்று கல்வியையும், பிறகலைகளையும் கற்றனர். நாட்டிலே கல்விமான்களின் வீடுகள் தோறும் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இரு

[4ஆம் பக்கம் பார்க்க]

## உலக ஆசிரியர் தினம்; தலைவர் அறிக்கை

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் உலக ஆசிரியர் நாள் குறித்து விடுத்த வாழ்த்துச் செய்தி இன்று பாடசாலை ரீதியாகவும், கோட்ட ரீதியாகவும் நடைபெறும் உலக ஆசிரியர் தின நிகழ்வுகளில் வாசிக்கப்படவுள்ளது.

உலக ஆசிரியர் தின விழா இன்று யாழ். மாவட்டத்திலுள்ள சகல கோட்டங்களிலும் பிற்பகல் 2 30 மணிக்கு விமரிசையாக நடைபெறவுள்ளது. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், மாணவர்கள் கலந்து கொள்ளும்இவ் விழாவில் பாடசாலை ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளமை தெரிந்ததே.

இதேவேளை பாடசாலை மட்டத்திலும் இன்று ஆசிரியர் தின விழாக்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வரி விளம்பரம்


**லலிதா சகஸ்ரநாமம்**

லலிதா சகஸ்ர நாமம் (கிரந்தலிபி) வெளிவந்துள்ளது. சுப்ரமண்ய சகஸ்ர நாமமும் உண்டு. தேவையானோர் தொடர்பு கொள்க.சோ.நிர்மலேஸ்வரசர்மா முருகமூர்த்தி கோவில், நவாலி. (சி-7545)

**ஆண்டு 6 அநுமதி**

ஆண்டு 5 மாணவருக்கு பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அநுமதி மாதிரிப் பரீட்சை 10 10-93 ஞாயிறு மு. ப. 11. 00 மணிக்கு நடைபெறும். வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர்வீதி, யாழ்ப்பாணம் (6221)

**காரல் மீன் கருவாடு கொள்வனவு**

எமது தொழிற்சாலைக்கு காரல் மீன் கருவாடு தேவை. வழங்கக் கூடியவர்கள் விலையைக் குறிப்பிட்டு உடன் அனுப்பி வைக்கவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், திருநெல்வேலி. [சி-7551]

**பாவித்தசாக்கு பைவிற்பனை**

எமது தொழிற்சாலையில் பாவித்த சாக்குகளும், பைகளும் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் கூறுவிலை சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி. (சி 7552)


## கோழிகளுக்கு தூக்கநோய்

(தொல்புரம்)

வலிமேற்குப் பகுதியின் சில பகுதிகளில் கோழிகளுக்கு தூக்க நோய் ஏற்பட்டுள்ளது.

மூளாய், தொல்புரம், சுழிபுரம், பகுதிகளில் குடிசைத் தொழிலாக கோழி வளர்ப்பினை மேற்கொண்டு வந்தவர்களுக்கு இதனால் நஷ்டம் ஏற்படும் ஏதுநிலை தென்படுகின்றது. மேற்படி தூக்க நோய் மேலும் பரவாவண்ணம் தடுப்பதற்கான முயற்சியினை கோழி வளர்ப்பாளர்கள் மேற்கொண்டுள்ளனர். (41)

## யாழ் ஆஸ்பத்திரியில் அனுபதி

(நமது நிருபர்)

முல்லைத்தீவில் கடந்த

# நகரும் திசையெல்லாம் சுட்டுக்கொண்டு சென்றோம்

## காயமடைந்த கேணல் தெரிவிப்பு

(கொழும்பு)

''யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது முதல் நாளான செவ்வாய்க்கிழமை நாம் ஓர் இடத்தில் முகாமிட்டிருந்த சமயம் விடுதலைப்புலிகள் எம்மை சுற்றி வளைத்து மோட்டார் குண்டுகளால் மோசமாகத் தாக்கினர். இவ்வாறு யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின்போது காயமடைந்து தற்போது கொழும்பில் சிகிச்சை பெற்றுவரும் கேணல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இத் தாக்குதல் நடவடிக்கையின்போது நாம் நகரும் திசைகள் எல்லாம் சுட்ட வண்ணம் இருந்தோம் இருட்டாக இருந்தபடியால் எதையுமே எம்மால் தாக்கக்கூடியதாக இருக்கவில்லை. திறந்த வெளியில்நாம்சென்றுகொண்டிருந்தபடியால் நாம் பலத்த தாக்குதலுக்கு இலக்காகிக் கொண்டிருந்தோம் மணல் பிரதேசமாக இருந்ததால் முன்னேறுவது கடினமாக இருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

## இரு நாடுகளுக்கிடையிலேயே யுத்தம் என்பதை காட்டியது

**—நிகால் பெரேரா கருத்து**

(கொழும்பு)

இருநாடுகளுக்கிடையே யுத்தம் நடைபெறுகிறது என்பதனையே நடைபெற்ற யுத்தம் காட்டியது என தேச விமுக்தி ஜனதா கட்சியின் செயலாளர் நிகால் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்தேவி ராணுவ நடவடிக்கை குறித்து பி.பி.ஸியின் சிங்கள சேவைக்கு அவர் வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## பல கேள்விகளுக்கு பதிலளிக்க அரசு கடமைப்பட்டுள்ளது

**- பி.பி.சியின் கொழும்பு முகவர் தெரிவிப்பு**

(கொழும்பு)

கிளாலியிலிருந்த இராணுவத்தினர் ஆனையிறவு இராணுவ முகாமிற்கு மீண்டும் திரும்பியுள்ளதைத் தொடர்ந்து இராணுவமும், அரசாங்கமும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிப்பதாக பி.பி.ஸிதெரிவித்துள்ளது.

கிளாலி பகுதியில் இராணுவ முகாம் அமைப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவைக் கைவிட்டு இறுதி நேரத்தில் இராணுவம் பின்வாங்கியமைக்கு அங்கு காணப்படும் அச்சுறுத்தலே காரணமாகும் என்று பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எது எப்படி இருந்தபோதும் விடுதலைப் புலிகளின்படகுகளை சேதமாக்குவதற்காக மட்டுமா இவ்வளவு பெரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்ற கேள்வி உட்பட பல்வேறு கேள்விகளுக்கும் அரசாங்கம் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

அத்துடன் பல உயிர்களையும், பாரிய டாங்கிகளையும் அழித்துக்கொண்டு ஏற்பட்ட இவ் இராணுவ நடவடிக்கையை இவ்வாறு முடக்கிக் கொண்டமை தொடர்பாக தெற்கேயுள்ள மக்களுக்கு அரசாங்கம் கண்டிப்பாக பதிலளிக்க வேண்டும் எனவும் எல்மோ பெர்னான்டோ குறிப்பிட்டார்.

## ஆசிரியர் கல்வி பயிற்சிநெறி விண்ணப்பம் கோரப்பட்டது

(கொழும்பு)

அடுத்த ஆண்டில் ஆசிரிய கலாசாலைகளில் ஆசிரியர் கல்விப் பயிற்சி நெறியை பயில்வதற்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இது செப்டெம்பர் மாத வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது.

1992 - 12 - 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆசிரியர் சேவை ணப்பக்க தகவுடையவர்கள் ஆவர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியானது சேவையில் உள்ள பட்டதாரிகளாய் இல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள், போதனாசிரியர்கள் ஆகியோருக்கு மாத்திரமே உரியதாகும் என்றும் பயிலுநர் ஆசிரியர் இதற்கு விண்ணப்பிக்க முடியாது என்றும் அத்த

## கைதடி மருத்துவ மனையில் மகப்பேற்று விடுதி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பகுதி மக்களின் நலன் கருதி கைதடி சித்த ஆயுள்வேத மருத்துவ மனையில் சகல வசதிகளையும் கொண்ட மகப்பேற்று விடுதி ஒன்று இயங்கி வருகின்றது.

பல இன்னல்களின் மத்தியில் கர்ப்பிணித்தாய்மார்மகப்பேற்றுக்காக நீண்டதூரம் பயணம் செய்யும்நிலை இதனால் தவிர்க்கப்படுமென அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## மகிழ்ச்சியுடன் வீடு திரும்பும் தென்மராட்சி மக்கள்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வந்த இராணுவ நடவடிக்கையினால் அப் பகுதியில் இருந்து வெளியேறிய மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியதைக் காண முடிந்தது.

கிளாலியிலிருந்து இராணுவம் வெளியேறிய செய்தியை அறிந்த மக்கள் மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் வீடு திரும்பியதை அவதானிக்க முடிந்ததென எமது தென்மராட்சி செய்தியாளர் தெரிவிக்கின்றார். (86)

## தாண்டிக்குளம் பகுதியை அமைச்சர் பார்வையிட்டார்

(கொழும்பு)

வடபகுதிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் என்பவற்றை அனுப்புவதை கண்காணிக்க அமைக்கப்பட்ட லெப். ஜெனரல் ஜெரி சில்வா தலைமையிலான குழுவின் அழைப்பை ஏற்று புனர்வாழ்வு, புனர்நிர்மாணத் துறை அமைச்சர் தயாரட்ன வவுனியா சென்றிருந்தார். அவர் தாண்டிக்குளம் சோதனை முகாமையும் சென்று பார்வையிட்டார்.

வடபகுதியிலிருந்து வவுனியாவிற்குள் வருபவர்களுக்கு நாளாந்தம் அனுமதி பத்திரம் வழங்கப்படவுள்ளது. பிரதேச கிராமசேவகரின் சிபார்சின் பேரில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக வவுனியாவினுள் நுழைபவர்கள் ஒரு வாரம் தங்க அனுமதி பத்திரம் வழங்கப்படும் கொழும்பிற்கு செல்வோர் விசேட விண்ணப்ப படிவத்தை நிரப்ப வேண்டும். மீண்டும் வவுனியா திரும்புகையில் இப்படிவம் மீளக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்தேவி நடவடிக்கை

## முதியோர் வார நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

கைதடியிலுள்ள அரசாங்க முதியோர் இல்லத்தினர் சர்வதேச முதியோர் வாரத்தை கொண்டாடி வருகின்றனர். கடந்த முதலாம் திகதியன்று சமயநிகழ்வுகளுடன் ஆரம்பமான இவ் வைபவம் எதிர்வரும் ஏழாம் திகதிவரை தொடரவுள்ளது. இறுதிநாள் நிகழ்ச்சிகள் நாளை காலை 9 மணி முதல் ஆரம்பமாகவுள்ளன. அரச முதியோர் இல்ல அதிகாரி க. அ. கனகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகரும், சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவைப் பகுதி பணிப்பாளர் திருமதி க. சிவசிதம்பரம், தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## இலங்கைத்தமிழ் அகதிகள் சுவீடனில் உண்ணாவிரதம்

(கொழும்பு)

சுவீடனிலிருந்து தாம் வெளியேற்றப்பட இருப்பதை ஆட்சேபித்து சுவீடனில் குடியேறியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்து உள்ளனர்.

விசாரணைகள் முடிவடைந்த இருநூறுக்கும் அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பப் போவதாக சுவீடன் அரசு அறிவித்திருந்தது. இதனை அடுத்தே அங்கு இருப்பவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். வடக்கு, கிழக்கு பகுதிகளில் யுத்தம் நடைபெற்று வருவதாலும், கொழும்பில் அப்பாவித் தமிழர்கள் கைதாவது தொடர்வதாலும் தாங்கள் தாயகம் திரும்ப முடியாமல் இருப்பதாக இவ் அகதிகள் கூறியுள்ளனர்.

## அடிப்படை தேவையனைத்தும் தட்டுப்பாடின்றி கிடைக்கிறதாம்

**சபையில் பிரதமர் தெரிவிப்பு**

[கொழும்பு]

நாட்டு மக்களுக்கு தேவையான உணவு, உடை, உறையுள் என்பன உட்பட எந்தவொரு அடிப்படைத் தேவையும் தட்டுப்பாடின்றி கிடைக்க வேண்டும் என்பதும், நாட்டின் பொருளாதாரம் சர்வதேச மட்டத்திற்கு உயர வேண்டும் என்பதும் அரசாங்கத்தின் கொள்கையாகும் என்று சிறிலங்காபிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நியாய விலை ஆணைக்குழு திருத்தச் சட்ட மூலத்தின் மீது பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய அவர்மேலும் கூறுகையில் தாராள பொருளாதாரக் கொள்கை காரணமாக பொருள்கள் யாவும் தாராளமாகக் கிடைக்கின்றன என்றும், உணவுப்பற்றாக்குறையின்பயனாக முன்னர் அனுபவித்த கஷ்டங்களை எதிர்நோக்க மக்கள் இப்போது தயாராக இல்லை என்றும் குறிப்பிட்டார்.

## முறக்கொட்டாஞ்சேனையில் மரநிழலின் கீழ் பாடசாலை

நிரந்தரக் கட்டடம் எதுவுமில்லாமல் ஓலைக்கொட்டில்களில் மாணவர்கள் மணற்தரையிலிருந்து கல்வி கற்கும் நிலையில் முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ண வித்தியாலயம் இருப்பதாக தெரிய வருகிறது.

25 கல்விப் பிரிவுகளுள் அடங்கும் சுமார் எண்ணூறு மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலையில் ஆரம்ப வகுப்பு முதல் பதினோராம் ஆண்டு வரை வகுப்புகள் இருக்கின்ற போதும் இங்கு கடமையாற்றும் 21 ஆசிரியர்களில் அநேகமானோர் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் என்றும் தெரிய வருகிறது.

அண்மையில் இப்பகுதியில் வீசிய கடும் காற்றைத் தொடர்ந்து கூரை ஓலைகளும் வீசப்பட்டு விட்டதால் ஆறு வகுப்களைச் சேர்ந்த மாணவர்கள் மரநிழலில் இருந்தே கல்வி கற்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.


அச்சுவேலி வணை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (ம. ப.)

**மூக்கிய அறிவித்தல்**

07 10 93ஆம் திகதி நடைபெற இருந்த வருடாந்தப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிறபோடப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.

செ. கணபதிப்பிள்ளை
தலைவர்

(6223)

**திலைவு கூருகின்றோம்...**

**1993-10-06**

திருநெல்வேலி. (சி 7552)

## கோழிகளுக்கு தூக்கநோய்

(தொல்புரம்)

வலிமேற்குப் பகுதியின் சில பகுதிகளில் கோழிகளுக்கு தூக்க நோய் ஏற்பட்டுள்ளது.

மூளாய், தொல்புரம், சுழிபுரம், பகுதிகளில் குடிசைத் தொழிலாக கோழி வளர்ப்பினை மேற்கொண்டு வந்தவர்களுக்கு இதனால் நஷ்டம் ஏற்படும் ஏதுநிலை தென்படுகின்றது. மேற்படி தூக்க நோய் மேலும் பரவாவண்ணம் தடுப்பதற்கான முயற்சியினை கோழி வளர்ப்பாளர்கள் மேற்கொண்டுள்ளனர். (41)

## யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதி

(நமது நிருபர்)

முல்லைத்தீவில் கடந்த மாதம் 18ஆம் திகதி குழுமி இருந்த மக்கள் கூட்டத்தின் மீது சிறிலங்கா போர் விமானங்கள் தாக்குதல் நடாத்தியதில் காயமடைந்த ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவ மனையில் இருந்து யாழ். போதனா மருத்துவ மனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவில் கடந்த மாதம் குழுமி இருந்த மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு 13 பேர் அந்த இடத்திலேயே பலியானதும் 40 பேருக்கு மேல் படுகாயமடைந்ததும் தெரிந்ததே.

மேற்படிசிகிச்சைக்காகயாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர் அவ்விடத்தைச் சேர்ந்த தயா (வயது 21) என்பவராவார். (சி)

## உலக ஆசிரியர் தின வைபவங்கள்

வேலணை கல்விக்கோட்டம் நடாத்தும் 'உலக ஆசிரியர் தின விழா' இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் சுண்டிக்குளி சென்.ஜோன்ஸ் அக்கடமியில் வேலணைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும்.

தொல்புரம் அமெரிக்கமிசன் தமிழ்க்கலவன் பாடசாலை அபிவிருத்திச்சங்கமும், பழைய மாணவர்களும் இணைந்து ஏற்பாடுசெய்துள்ள உலக ஆசிரியர் தின வைபவத்தில் அப்பாடசாலையில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

உலகஆசிரியர்தினத்தையொட்டி இன்றுகாலை 9 30 மணிக்குஆனைக்கோட்டைபால சுப்பிரமணிய வித்தியாசாலையில் பாடசாலை அபவிருத்தி சங்கமும், பழைய மாணவர்களும் ஒருங்கிணைந்து பாடசாலை அதிபர், ஆசிரியர்களைக் கௌரவிக்கவுள்ளனர்.

(22),(41)

முகாம் அமைப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவைக் கைவிட்டு இறுதி நேரத்தில் இராணுவம் பின்வாங்கியமைக்கு அங்கு காணப்படும் அச்சுறுத்தலே காரணமாகும் என்று பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் எல் மோ பெர்னாண்டோ தெரிவித்துள்

யும், பாரிய டாங்கிகளையும் அழித்துக்கொண்டு ஏற்பட்ட இவ் இராணுவ நடவடிக்கையை இவ்வாறு முடக்கிக் கொண்டமை தொடர்பாக தெற்கேயுள்ள மக்களுக்கு அரசாங்கம் கண்டிப்பாக பதிலளிக்க வேண்டும் எனவும் எல்மோ பெர்னான்டோ குறிப்பிட்டார்.

## ஆசிரியர் கல்வி பயிற்சிநெறி விண்ணப்பம் கோரப்பட்டது

(கொழும்பு)

அடுத்த ஆண்டில் ஆசிரிய கலாசாலைகளில் ஆசிரியர் கல்விப் பயிற்சி நெறியை பயில்வதற்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இது செப்டெம்பர் மாத வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது.

1992 - 12 - 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆசிரியர் சேவைக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க தகவுடையவர்கள் ஆவர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியானது சேவையில் உள்ள பட்டதாரிகளாய் இல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள், போதனாசிரியர்கள் ஆகியோருக்கு மாத்திரமே உரியதாகும் என்றும் பயிலுநர் ஆசிரியர் இதற்கு விண்ணப்பிக்க முடியாது என்றும் அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## இடம் பெயர்ந்த மக்களுக்கு நடமாடும் நிவாரண சேவை

(யாழ்ப்பாணம்)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இருந்து இடம் பெயர்ந்து மிருசுவில், வரணி, விடத்தற்பளை, கைதடி, நாவற்குழி ஆகிய இடங்களில் தங்கியுள்ள தீவக மக்களுக்கு புங்குடுதீவு நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் நிவாரண உலர் உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றது.

மேற்படி மக்கள் தங்கியிருக்கும் அந்தந்த இடங்களுக்கு லொறியில் பொருள்களைக் கொண்டு சென்று விநியோகிக்கும் இந்த நடமாடும் நிவாரணசேவை' நேற்றுமுன் தினம் தொடக்கம் நடைபெற்று வருவதாக பிரஸ்தாபசங்கவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (22)

தமிழீழ கல்வி மேம்பட

எம் ஆசிரியர் எல்லோரும்

பல்லாண்டு நலமுடன் வாழ்ந்து

சேவைகள் யாவும் நன்றே நல்கி

உலக ஆசிரியர் தின நன்னாளில் வாழத்துகின்றோம்.

வைபவங்களிற்கு பரிமாறு சேவை வழங்கும் முன்னணி நிலையம்

**சுவையருவி**

மின் நிலைய வீதி - யாழ்ப்பாணம்

(சி7553)

மயிலிட்டி

## புனித செபமாலை மாதா திருவிழா

நாளை 7 - 10 - 1993 அன்று மேற்படி செபமாலை மாதா திருவிழா மருதனார்மடம் கிறிஸ்தவ சேவ ஆசிரம அருகாமையில் அமைந்துள்ள அன்னை வேளாங்கன்னி ஆலயத்தில் பங்குத் தந்தை மரிய செபஸ்ரியான் அடிகளாரால் காலை 6. 30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருச்சொரூப ஆசீர்வாதமும் வழங்கப்படும். அன்னையின் அடியார்கள் வந்து ஆசிபெறுமாறு அழைக்கப் படுகிறார்கள்.

செபமாலை மாதா பங்கு நிர்வாகிகள்

(6225)

இடங்களுக்கு திரும்பியதைக் கின்றார். (86)

## தாண்டிககுளம் பகுதியை அமைச்சர் பார்வையிட்டார்

(கொழும்பு)

வடபகுதிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் என்பவற்றை அனுப்புவதை கண்காணிக்க அமைக்கப்பட்ட லெப். ஜெனரல் ஜெரி சில்வா தலைமையிலான குழுவின் அழைப்பை ஏற்று புனர்வாழ்வு, புனர்நிர்மாணத் துறை அமைச்சர் தயாரட்ன வவுனியா சென்றிருந்தார். அவர் தாண்டிக்குளம் சோதனை முகாமையும் சென்று பார்வையிட்டார்.

வடபகுதியிலிருந்து வவுனியாவிற்குள் வருபவர்களுக்கு நாளாந்தம் அனுமதி பத்திரம் வழங்கப்படவுள்ளது. பிரதேச கிராமசேவகரின் சிபார்சின் பேரில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக வவுனியாவினுள் நுழைபவர்கள் ஒரு வாரம் தங்க அனுமதி பத்திரம் வழங்கப்படும் கொழும்பிற்கு செல்வோர் விசேட விண்ணப்ப படிவத்தை நிரப்ப வேண்டும். மீண்டும் வவுனியா திரும்புகையில் இப்படிவம் மீளக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்தேவி நடவடிக்கை போதிக்கும் பாடம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்கு செலவிட வேண்டிய பணமும் உயிரிழப்புகளும் அதிகம் என்பதையே யாழ்தேவி நடவடிக்கை அரசுக்கு உணர்த்தியுள்ளது என நவசமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர்வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

லண்டன் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் நாட்டில் இன்று நடைபெற்ற யாழ்தேவி இராணுவ நடவடிக்கை முற்றுப்பெறாமல் முடிவுற்ற ஓர் யுத்தம். இதற்கு செலவிடப்பட்ட பணம் உயிரிழப்பு என்பன எண்ணில் கணக்கிட முடியாதவை என்றார்.

### விவசாயிகளுக்கு ஓய்வூதியம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் வைபவம் முதல் தடவையாக நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் காமாணிக்கவாசகர் தலைமையில் நாளை வியாழன்று பிற்பகல் இரண்டு மணி அளவில் யாழ்ப்பாண செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### ஊழியர் தினவிழா

யாழ் பல்கலைக்கழகத்தின் இவ்வாண்டுக்கான ஊழியர் தினவிழா இன்று புதன் கிழமை மேற்படி பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

காலை 8. 00 மணி முதல் பிற்பகல் 6. 00 மணிவரை நடைபெறவுள்ள இவ்விழாவின் பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா கலந்து கொள்வார்.

### மண்ணெண்ணெய் விநியோகம்

புங்குடுதீவு-நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்கு நேற்றுமுதல் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறதுபங்கீட்டுஅட்டைஒன்றிற்கு ஒன்றரை லீற்றர் மண்ணெய் லீற்றர் 25 ரூபா விலையில் சங்கத்தின் கே. கே. எஸ். வீதியில் உள்ள கிளையொன்றில் வழங்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (22)

புதிய

உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,

யாழ்ப்பாணம்.

**O/L** 2 மாத கால துரித மீட்டல்

வினா - விடை

ஆரம்பம்:-

**07.10.93** வியா. 3 மணி

❖ கணிதம்
திரு. சதீஸ்

❖ விஞ்ஞானம்
திரு தயாநிதி

❖ சமூகக்கல்வி
திரு யூப்பட்

❖ தமிழ்
திரு. பிரதீபன்

❖ ஆங்கிலம்
திரு. கிரிகரன்

❖ வர்த்தகம்
திரு சக்தி

❖ சைவசமயம்
திரு. கிரி

(சி-7548)

முதல் பதினோராம் ஆண்டு வரை வகுப்புகள் இருக்கின்ற வாகியுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது.

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (ம. ப.)

## முக்கிய அறிவித்தல்

07 10 93ஆம் திகதி நடைபெற இருந்த வருடாந்தப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.

செ. கணபதிப்பிள்ளை
தலைவர்

(6223)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-10-06

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை கும்புறுப்பிட்டிப் பகுதியில் எதிர்பாராத விதமாக துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

**சாண்டோ** (இராமு கனகசுந்தரம் - பீலியடி, கன்னியா, திருமலை)

மன்னார் - விடத்தல்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். சாம்** (துரைரட்ணம் ஜெயரூபன் - ஏழாலை தெற்கு, சுன்னாகம் - யாழ்)

1987ஆம் ஆண்டு யாழ் - பலாலி இராணுவ முகாமில் இந்திய - இலங்கை கூட்டுச்சதியை அம்பலப்படுத்தும் முகமாக சயனைட் உட்கொண்ட போது மருத்துவமனையில் வீரச்சாவெய்திய-

**கப்டன் ரகுவப்பா** (ராஜமாணிக்கம் ரகுநாதன்- பாலாவி குடியேற்றம், பொலிகண்டி - வல்வெட்டித்துறை)

1988ஆம் ஆண்டு மயிலங்காட்டில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான-

**பொன்னம்பலம்** ( - - - - )

மட்டு - காங்கேயனோடைப் பள்ளிவாசலில் வைத்து இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட உபதபாலதிபரான தமிழ்ப்பொதுமகன்.

1989ஆம் ஆண்டு பரந்தன், 5-ம்வாய்க்கால் பகுதியில் தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-

பரந்தன் பிரதேசப் பொறுப்பாளர்-

**ரகு** (நவரத்தினம் நடனசிகாமணி - 12, உருத்திரபுரம் - கிளிநொச்சி)

இதே சம்பவத்தின் போது பலியான நாட்டுப்பற்றாளர்களான-

**குமார்** (கறுப்பையா குமாரசாமி - நீவில், உருத்திரபுரம் கிளிநொச்சி)

**ரவி** (தர்மலிங்கம் ரவீந்திரன் - உருத்திரபுரம்-கிளிநொச்சி)

1991ஆம் ஆண்டு பூநகரி - ஆலங்கேணிப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானத் தாக்குதலில் பலியான தமிழ்ப்பொதுமகன்.

1992ஆம் ஆண்டு கட்டைக்காட்டில் 01.10.92இல் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வரும் போது யாழ் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய-

**மேஜர் கார்வண்ணன் பீற்றர்** (சிவஞானசுந்தரம் சிவசோதி - மிருசுவில் வடக்கு - மிருசுவில்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7550]

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

கூற்றுடன்று மேல்வரினும் கூடி
எதிர்நிற்கும் ஆற்றலதுவே படை.

-திருக்குறள்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## தடம்புரண்ட 'யாழ்தேவி'

பல்லாயிரக்கணக்கான துருப்புக்களையும், கனரக வாகனங்களையும், விமானப்படை, கடற்படை என்பவற்றின் உதவியுடன் சிறிலங்கா இராணுவம்தொடங்கிய பாரிய இராணுவ நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்துள்ளது. சுமார் 25 தினங்களுக்குத் திட்டமிடப்பட்டிருந்த இவ் இராணுவ நடவடிக்கையை சடுதியாக ஒருவார காலத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டிய அவல நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

சிறிலங்கா இராணுவத்தின் இவ் அவல நிலைக்கு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகரமான தாக்குதலே காரணமாகும். கடந்த புதன்கிழமை புலிகள் நடத்திய வரலாற்றுப் பெரும் சமர்களில் ஒன்றான புலோப்பளை சமரானது சிங்கள இராணுவத்தைக் கலங்கடித்தது. இச் சமரில் சிறிலங்கா இராணுவம் சந்தித்த இழப்பானது அவர்களைக் கிலிகொள்ள வைத்ததென்றால் மிகையில்லை.

இச் சமரில் சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்பை எந்த வகையிலும் அரசாங்கம் மூடிமறைக்க முடியவில்லை, போரின் உக்கிரத்தையும் புலிகளின் திறனையும் போரில் ஈடுபட்ட இராணுவத் தரப்பினரே தமது தோல்விக்கான காரணங்களாக வெளியிட வேண்டியிருந்தது. களத்தில் நின்ற ஒரு இராணுவ அதிகாரி "புலிகள் நடத்திய திடீர் தாக்குதலினால் பல்லாயிரக் கணக்கான சிப்பாய்களைக் கொண்ட இராணுவ அணி குழப்பமடைந்து சின்னாபின்னமாகியது. இதனால் படையணி அல்லோல கல்லோல நிலைக்குத் தள்ளப்பட்டது" என்றார்.

இவ்வாறாக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் போர்ப் பிரகடனத்திற்கு அவர்களால் வழங்கப்பட்ட பதிலடி என்றே கொள்ளலாம். இப் பதிலடி மூலம் சிறிலங்கா ஜனாதிபதிக்கு கிடைத்துள்ள பாடத்தை எண்ணும்போது 1967 ஆம் ஆண்டில் நடைபெற்ற அரபு - இஸ்ரேல் போரின் பின் இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் மோசே தயான் கூறிய ஒரு வசனம் ஒன்று நினைவில் வருகின்றது. "இப் போரில் ஏற்

# அதிகாரப் போட்டியால் ரஷ்யா சீரழிகிறது

கடந்த வாரத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்த ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் பாராளுமன்றத்திற்கான தேர்தல்களை நவம்பர் மாதத்தில் நடத்தப்போவதாக அறிவித்தார் அதிபர் யெல்ட்சின் மேற்கொண்ட தனியார் மயமாக்கல் மற்றும் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு பாராளுமன்றம் முட்டுக்கட்டைபோட்டு வந்தமையால் எழுந்த அரசியலமைப்பு நெருக்கடி நிலைக்கு தீர்வு காணவே அதிபர் யெல்ட்சின் மேற்படி முடிவை எடுக்க வேண்டியவரானார். இதனால் ரஷ்யாவில் இரண்டு அதிகார மையங்கள் தோன்றியது போன்றதொரு நிலை ஏற்பட்டது.

ஜனநாயக அமைப்பு ஒன்றில் சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பாக ஐக்கியப்பட்ட மாற்றுக் கருத்துக்கள் இருக்க முடியாதா என்ற கேள்வி இங்கு எழலாம். ஜனநாயக அமைப்பு பன்முகப்பட்ட அதிகாரத்தையும் பாராளுமன்ற விவாதங்களையும் கலந்துரையாடல்களையும் உள்ளடக்கியதாகும். ஆனால் ரஷ்யப் பாராளுமன்றம் அதிபரின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து மோதல் நிலைவரை இட்டுச்சென்றது.

துணைஅதிபர் அலெக்சாண்டர் ருஷ்கோவ், சபாநாயகர் ருஷ்லான் கஷ்புலட்டோவ் ஆகியோர் பாராளுமன்றக் கட்டடத்தில் தங்கியிருக்கவும் முடிவுசெய்தனர். அக்டோபர் 2ம், 3-ம் திகதிகளில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் பெருமளவானோர் கலந்து கொண்டதுடன் ஆர்ப்பாட்டங்களில் வன்முறையும் கலந்திருந்தது. இதில் கலந்து கொண்டிருந்த மக்களின் மனோநிலை போல்சுவிக் புரட்சியின்போது காணப்பட்டதைப் போன்றிருந்ததாக செய்தியாளர்கள் வர்ணிக்கின்றனர். இது ரஷ்ய சமூகத்தில் ஏற்பட்டிருந்த முரண்பாடுகளை துலக்கமாக வெளிக்காட்டியிருந்தது. இந்த ஆர்ப்பாட்டங்களிலிருந்து வன்முறைப் பொறிகள் வெடித்து கிளம்பின.

ரஷ்யாவில் அதிகாரப் போட்டி என்ற தலைப்பின் கீழ் புதுடில்லியின் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த அநுராதா சினோய் எழுதிய குறிப்பின் மொழியாக்கம் இங்கு தரப்படுகின்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மாஸ்கோ நகர மேயரின் அலுவலகத்தை முற்றுகையிட்டு அங்கிருந்த பொருள்களைச் சூறையாடினர். அத்துடன் வேறுபல அரசாங்க அலுவலகங்களும் சேதமாக்கப்பட்டன ஆரம்பத்தில் படைபலப் பிரயோகத்தை தவிர்த்துவந்த அதிபர் யெல்ட்சின் இந்த நிலையில் ஆர்ப்பாட்டத்தை நசுக்குமாறு இராணுவத்திற்கு உத்தரவைப் பிறப்பித்தார்.

முக்கியமான கம்யூனிஸ்ட் தலைவர்கள் உள்ளிருக்கப் பாராளுமன்றமான வெள்ளை மாளிகையை டாங்கிகள் மற்றும் கவசவாகனங்கள் சகிதம் சூழ்ந்து கொண்டு ரஷ்ய இராணுவத்தினர் முற்றுகையிட்டனர். இந்த நிலையில் முக்கிய தலைவர்கள் சண்டையில் சாவது அல்லது சரணடைவது என்பதில் இரண்டில் ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகினர். இதில் துணை அதிபர் அலெக்சாண்டர் ருஷ்கோவ், சபாநாயகர் ருஷ்யான் கஷ்புலட்டோவ் ஆகியோர் இரண்டாவதையே தெரிவு செய்தனர். அவர்கள் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு இனிமேல் உள்ளாவர்.

ஆனால் ரஷ்யாவில் அதிகாரத்திற்கான போட்டி இத்துடன் முடிந் விடப்போவதில்லை. ஜனநாயக சுதந்திரங்களை, அடக்கி ஒடுக்குவதில் அரசியலமைப்புக்கு புறம்பான வழிவகைகளைக் கையாண்டமை தொடர்பாக அதிபர் பொறிஸ் யெல்ட்சின் மீது பலத்த கண்டனங்கள் எழுப்பப்படக் கூடும். இன்னும் மேலதிகமாக கடந்த ஆண்டு முதலே உண்மையான அதிகாரங்கள்மையத்திலிருந்து ரஷ்யப் பிராந்தியங்களுக்கு படிப்படியாக வழங்கப்பட்டுவந்துள்ளன. சில பிராந்தியங்கள் அதிபர் யெல்ட்சினின் தனியார் மயமாக்கலுக்கு எதிர்ப்பு தெரிவிக்க- சில பிராந்தியங்கள் தாமதப்படுத்த - மற்றும் சில தயக்கத்துடன் அமுலாக்க ஒரு குழப்ப நிலையே நிலவிவந்தது.

இப் பிராந்தியங்களின் பூரணமான ஆதரவைப் பெற்றால்தான் அதிபர் யெல்ட்சின் தமது கொள்கைகளை முன்னெடுத்து அமுல்படுத்த முடியும் என்பதும், தேர்தல் வெற்றிகளைப் பெறக்கூடியதாக இருக்கும் என்பதும் வெள்ளிடைமலை.

எனவே இன்றைய நிலையில் அதிகாரங்கள் அனைத்தையும் தம்வசப்படுத்தக் கூடிய வகையில் அதிகார மையப்படுத்தலை செய்ய வேண்டிய நிலைக்கு அதிபர் பொறிஸ் யெல்ட்சின் உள்ளாகியுள்ளார். இதனால் அரசியலமைப்பை தமக்கு ஏற்ற வகையில் திருத்தத்திற்கு உள்ளாக்குவதே அதிபர் யெல்ட்சினின் முதலாவது நடவடிக்கையாக இனிமேல் இருக்கக் கூடும். இத்தகைய மாதிரி அரசியலமைப்பு ஒன்று ஏற்கனவே சுற்றுக்கு விடப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. இதில் துணை அதிபர் மற்றும் சபாநாயகர் போன்ற பதவிகள் நீக்கப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இதற்காக யெல்ட்சின் பிராந்திய தலைவர்களின் ஆதரவைப் பெற வேண்டிய நிலையும் இருக்கின்றது. இப் பிராந்திய தலைவர்கள் பலரும் முன்னைய சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான தூண்கள் என்பது கவனிக்கத்தக்கது. இவர்களுக்கு கூடுதல் அதிகாரம் தருவதாக ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் வாக்குறுதி அளித்துள்ளார்.

ஆனாலும் ரஷ்யாவின் பணவீக்க விகிதாசாரத்தை கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் அதிபர் பொறிஸ் யெல்ட்சின் இல்லை என்பதும், உற்பத்தியை பெருக்க வகையற்றும் இருக்கின்றார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. இதனிடையில் ரஷ்யக் குடிமக்கள் பொருளாதார முன்னேற்றங்களோடு கூடவே அண்மையில் பெற்ற அரசியல் உரிமைகளையும் பாதுகாக்க விழைகின்றனர்.

## பகைவனுக்கு குழிவெட்டி புதைப்போம்

தாயுனக்குத் தந்ததென்ன பாலா? இல்லைத்
தண்ணீரா? தமிழிச்சி முலையில் உந்தன்
வாயருந்திக் கொண்டதென்ன பாலா? அன்றி
வடித்த கஞ்சித் தண்ணீரா? தமிழா! இன்னும்
பாயிலென்ன படுக்கையடா, எதிரி எங்கள்
படலையிலே வந்திடவும் தெருவின் ஓரம்
நாயெனவே கிடப்பதற்கா பிறந்தாய்? ரத்த
நரம்பினிலே... என்றுனக்கு வீரம் பாயும்?

விழிதிறந்து பாருந்தன் தாய்மண் இங்கே
வேதனையாற் துடிக்கிறது, உலகின் மூத்த
மொழியிறந்து போகிறது எதிரி வானின்
மேகத்தில் மறைந்திருந்து வீசும் குண்டால்
அழிகிறதே! திருநாடு விம்மி விம்மி
அழுகிறதே, அடதமிழா நீயேன் இங்கு
பழிசுமந்து வாழ்கின்றாய், எழும்பு, உன்னை
படுத்திருக்க வோடாவுன் அன்னை பெற்றாள்?

வேலெடுத்து வாளெடுத்து பகைவர் அஞ்ச
வில்லெடுத்த பரம்பரையின் விழுதே! இன்று
காலெடுத்து நடப்பதற்கும் பயந்து நீயேன்
காற்செருப்பாய் வாழ்கின்றாய், தமிழன் என்ற
நாலெழுத்தைக் கேட்டவுடன் எதிரி மேனி
நடுநடுங்க வேண்டாமோ? தாயின் வீரம்
பாலருந்திக் கொண்டவனே எழடா, வந்த
பகைவனுக்குக் குழிவெட்டிப் புதைப்போம் வாடா.

புதுவை இரத்தினதுரை

# யெல்ட்சின் எதிர்ப்பாளர்கள் இராணுவத்திடம் சரணடைந்தனர்

## மாஸ்கோவில் தொடர்ந்தும் ஊரடங்கு

(மாஸ்கோ)

ரஷ்யாவின் முன்னாள் சபாநாயகர் அலெக்சாண்டர் ருஷ்கோவ் மற்றும் சபாநாயகர் ருஷ்லான் கஷ்புலட்டோவ் ஆகியோர் இராணுவத்தினரிடம் சரண் அடைந்துள்ளனர். சரண் அடைந்துள்ள இவர்களுடன் சேர்த்து மற்றும் பல முக்கிய தலைவர்களும் கைது செய்யப்பட்டு அதிக பாதுகாப்புடைய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாஸ்கோவின் பாராளுமன்றக் கட்டட

எதிர்க்கட்சி அமைப்புகளும், நாளேடுகளும் தடைசெய்யப்பட்டு இருப்பதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான சண்டைகள் கடந்த ஞாயிறுமுதல் ஆரம்பமாகின என்பதும் இச்சண்டைகளில் 65 பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## கைதான தலைவர்களுக்கு தீங்கிழைக்கப்படமாட்டாது

### - யெல்ட்சின் தெரிவிப்பு

(மாஸ்கோ)

கைது செய்யப்பட்டிருக்கும் எதிக்கட்சித் தலைவர்களுக்கு எவ்வித தீங்கும் இழைக்கப்

அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் உட்பட அமெரிக்க பொருளாதார சமூகத் தலை

## கம்யூனிஸ்ட் போக்குடையோரை முறியடிக்க உத்தரவு

### ரஷ்ய அதிபர் யெல்ட்சின் வழங்கினார்

பட்ட இழப்பை எந்த வகையிலு அரசாங்கம் மூடிமறைக்க முடியவில்லை, போரின் உக்கிரத்தையும் புலிகளின் திறனையும் போரில் ஈடுபட்ட இராணுவத் தரப்பினரே தமது தோல்விக்கான காரணங்களாக வெளியிட வேண்டியிருந்தது. களத்தில் நின்ற ஒரு இராணுவ அதிகரி "புலிகள் நடத்திய திடீர் தாக்குதலினால் பல்லாயிரக் கணக்கான சிப்பாய்களைக் கொண்ட இராணுவ அணி குழப்பமடைந்து சின்னாபின்னமாகியது. இதனால் படையணி அல்லோல கல்லோல நிலைக்குத் தள்ளப்பட்டது" என்றார்.

இவ்வாறாக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் போர்ப் பிரகடனத்திற்கு அவர்களால் வழங்கப்பட்ட பதிலடி என்றே கொள்ளலாம். இப்பதிலடி மூலம் சிறிலங்கா ஜனாதிபதிக்கு கிடைத்துள்ள பாடத்தை எண்ணும்போது 1967 ஆம் ஆண்டில் நடைபெற்ற அரபு - இஸ்ரேல் போரின் பின் இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் மோசே தயான் கூறிய ஒரு வசனம் ஒன்று நினைவில் வருகின்றது. "இப்போரில் ஏற்பட்ட விழுப்புண்களே நாசர் (எகிப்திய ஜனாதிபதி) தன் ஆயுட்காலம் முழுதும் நக்கிக் கொண்டிருக்கப் போதுமானதாகும்" என்பதே அவரது அக் கூற்றாகும்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை என பலர் வற்புறுத்திய போதும் சிறிலங்கா ஜனாதிபதி அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. அவரது நடவடிக்கையானது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு இலகுவானது, முன்னைய ஜனாதிபதிகளும் அரசாங்கமும் இது குறித்து அக்கறை காட்டாமையாலேயே அது சாத்தியமற்றுப் போயிற்று என்பது போன்றிருந்தது. விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் குறித்தோ, இரு நாட்டு இராணுவங்களுடன் அவர்கள் நடத்திய போர்கள் குறித்தோ, அவர் கருத்திற் கொண்டதாக இல்லை. இதற்கும் மேலாக உலகில் அனைவராலும் மெச்சப்படும் விடுதலைப்புலிகளின் மனோபலம் குறித்தோ அவர் கணிப்பிட்டதாக இல்லை.

இவற்றை அசட்டை செய்துதான் யுத்தத்தின் முடிவிற்கு காலவரையறைகளை அவர் நிர்ணயித்தார். முன்னைய ஜனாதிபதிகள், பாதுகாப்பு அமைச்சர்கள், இராணுவத் தளபதிகள் யுத்தத்திற்கு காலவரையறை விதித்து தோல்விகண்டதை அவர் மறந்து போனாரோ அன்றி அறிந்திருக்கவில்லையோ தெரியாது. ஆனால் யுத்தத்திற்காக நாட்டின் முழு வளங்களையும் திசைதிருப்பிவிட அவர் சித்தமாக இருந்தார்.

இதைத்தொடர்ந்துதான் 'ஒப்பரேசன் யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. யாழ்தேவி புகையிரதம் போன்றே கடுகதியில் தென்மராட்சிப் பகுதியில்செல்வதென திட்டமிட்ட இந் நடவடிக்கையானது சில மைல்கள் செல்வதற்குள்ளேயே தடம் புரண்டது.

புலிகள் கொடுத்த பதிலடியானது தனியாக ஒப்பரேசன் யாழ்தேவிக்கு கிடைத்த பதிலடியாகவே மட்டும் சிறிலங்கா ஜனாதிபதி கருதுவாரேயானால், அதற்காக அவர் மீண்டும் பல தடவை வருந்த வேண்டி வரும். சிங்கள இராணுவத்தினால் விரும்பியவாறு கொன்று குவிப்பதற்கு விடுதலைப் புலிகள் ஒன்றும் ஜே. வி. பி. இயக்கமல்ல. உலகிலுள்ள விடுதலை இயக்கங்களில் செயற்பாடு மிக்க தலைமைத்துவத்தையும், எதற்கும் அஞ்சா மனோபலமும், துணிவும்கொண்ட போராளிகளையும் உடைய இயக்கம், என்பதைஅவர்புரிந்துகொள்வது நல்லது.

# யெல்ட்சின் எதிர்ப்பாளர்கள் இராணுவத்திடம் சரணடைந்தனர்

## மாஸ்கோவில் தொடர்ந்தும் ஊரடங்கு

(மாஸ்கோ)

ரஷ்யாவின் முன்னாள் சபாநாயகர் அலெக்சாண்டர் ருஷ்கோவ் மற்றும் சபாநாயகர் ருஷ்லான் கஷ்புலட்டோவ் ஆகியோர் இராணுவத்தினரிடம் சரண் அடைந்துள்ளனர். சரண் அடைந்துள்ள இவர்களுடன் சேர்த்து மற்றும் பல முக்கிய தலைவர்களும் கைது செய்யப்பட்டு அதிக பாதுகாப்புடைய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாஸ்கோவின் பாராளுமன்றக் கட்டட வளாகத்தைச் சுற்றி இடம் பெற்ற பலத்த சண்டைக்குப் பின்னர் பாராளுமன்றத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் இராணுவத்திடம் சரணடைந்ததாக மாஸ்கோ வானொலி அறிவித்தது.

பாராளுமன்றக் கட்டடத்தின் மீது இராணுவ வாகனங்கள் சரமாரியாகத் தாக்குதல் நடத்தின என்றும் பூர்வாங்க விசாரணைக்குப் பின்னர் தலைவர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்படும் என்றும் டாஸ் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

மாஸ்கோவில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருப்பதுடன் எதிர்க்கட்சி அமைப்புகளும், நாளேடுகளும் தடைசெய்யப்பட்டு இருப்பதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான சண்டைகள் கடந்த ஞாயிறுமுதல் ஆரம்பமாகின என்பதும் இச்சண்டைகளில் 65 பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### எதிர்த்தோர் சுடப்பட்டனர்

(மாஸ்கோ)

ரஷ்யாவின் பாராளுமன்றக் கட்டடத்தின் உயர்ந்த கூரைகளிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்களை ரஷ்ய இராணுவத்தினர் சுட்டு வீழ்த்தியுள்ளனர். இதன் பின்னர் பாராளுமன்றக் கட்டடத்தினுட் புகுந்த இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களுள் முன்னாள் ஜெனரல் அல்பேர்ட் மக்கோவ்வும் ஒருவர் ஆவார்.

## கைதான தலைவர்களுக்கு தீங்கிழைக்கப்படமாட்டாது

### - யெல்ட்சின் தெரிவிப்பு

(மாஸ்கோ)

கைது செய்யப்பட்டிருக்கும் எதிக்கட்சித் தலைவர்களுக்கு எவ்வித தீங்கும் இழைக்கப் படமாட்டாது என்று ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் உட்பட அமெரிக்க பொருளாதார சமூகத் தலைவர்களுக்கு உத்தரவாதம் அளித்துள்ளார்.

## அமெரிக்கா, ஐரோப்பா ரஷ்ய அதிபருக்கு ஆதரவு

ரஷ்யாவில் உடனடி நெருக்கடிகள் சமாளிக்கப்பட்டுள்ள போதிலும், நிலைமையைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருக்க அதிபர்யெல்ட்சின் முயலவேண்டும் என்றும், அதற்குஅமெரிக்காவின் பூரண ஆதரவு இருக்கும் என்றும், அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனின் நிர்வாகம் கூறியுள்ளது.

மாஸ்கோவில் ஏற்பட்ட அதிகாரப் போட்டியில் வெற்றி பெற்ற பொறிஸ் யெல்ட்சினுக்கு வாழ்த்தும் ஆதரவும் தெரிவிக்கும் அதே வேளை, உயிரிழந்தோருக்காக கவலைப்படுவதாகவும், காயமடைந்தோர் விரைவில் குணமடைய ஆவன செய்யப்பட வேண்டுமென்றும் ஐரோப்பிய பொருளாதார சமூகம் கூறியுள்ளது.

## ஜெயலலிதா பாதுகாப்பை கருணாநிதி ஏற்றார்

(சென்னை)

தமிழக அரசின் பாதுகாப்பை ஏற்றுக்கொள்ள தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி இணக்கம் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளால் கருணாநிதியின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என கருதப்பட்டதாலேயே தமிழக அரசின் பாதுகாப்பு உதவியை ஏற்றுக்கொள்ள கருணாநிதி இணங்கியதாக தி. மு. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசனை செய்தபின்பே கட்சித் தலைவர் கருணாநிதி இறுதி முடிவு எடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

தம்மைக் கொல்ல தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருவதாகவும் தம் கட்சிப்பிரமுகரான வை.கோபாலசாமிக்கு ஆதரவாகவே விடுதலைப் புலிகள் தம்மை தீர்த்துக்கட்ட முடிவு செய்துள்ளதாகவும் கருணாநிதி கூறியுள்ளமை தெரிந்ததே.

## பாகிஸ்தானில் இன்று தேர்தல் ஐந்தரைக் கோடி பேர் வாக்களிப்பர்

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தானில் இன்று பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் நியாயமான முறையில் தேர்தல் நடைபெறுவது இதுவே முதற்தடவையாக இருக்கும் என்று அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்னாள் பிரதமரும் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவியுமாகிய திருமதி பெனாசிர் பூட்டோவின் அணிக்கும் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் அணிக்கும் இடையே கடும் போட்டி இத் தேர்தலில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் ஐந்தரைக்கோடி பாகிஸ்தானிய வாக்காளர்கள் இன்று வாக்கெடுப்பில் கலந்து கொண்டு தமது அடுத்த ஆட்சியாளர்களை தெரிவு செய்யவுள்ளனர்.

### பத்திரிகை வெளியீடுகளுக்கு யெல்ட்சின் தடைவிதிப்பு

பிராவ்தா, சோவியத்காயா ரொஸ்சியா உட்பட எதிர்க் கட்சிகளின் சார்பில் வெளியிடப்படும் அனைத்துப் பத்திரிகைகளும் வெளியிடப்படுவதற்கு ரஷ்ய அதிபர் யெல்ட்சினின் நிர்வாகம் தடை செய்துள்ளது.

இதேவேளை பாராளுமன்றக் கட்டடம் இன்னமும் எரிந்துகொண்டிருப்பதாகவும் அதனால் உயிரிழந்தவர்களின் உண்மையான எண்ணிக்கையைகணக்கிடமுடியாமல் இருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

மேகத்தில் மறைந்திருந்து வீசும் குண்டால்
அழிகிறதே! திருநாடு விம்மி விம்மி
அழுகிறதே, அடதமிழா நீயேன் இங்கு
பழிசுமந்து வாழ்கின்றாய், எழும்பு, உன்னை
படுத்திருக்க வோடாவுன் அன்னை பெற்றாள்?

வேலெடுத்து வாளெடுத்து பகைவர் அஞ்ச
வில்லெடுத்த பரம்பரையின் விழுதே! இன்று
காலெடுத்து நடப்பதற்கும் பயந்து நீயேன்
காற்செருப்பாய் வாழ்கின்றாய், தமிழன் என்ற
நாலெழுத்தைக் கேட்டவுடன் எதிரி மேனி
நடுநடுங்க வேண்டாமோ? தாயின் வீரம்
பாலருந்திக் கொண்டவனே எழடா, வந்த
பகைவனுக்குக் குழிவெட்டிப் புதைப்போம் வாடா.

புதுவை இரத்தினதுரை

## கம்யூனிஸ்ட் போக்குடையோரை முறியடிக்க உத்தரவு

### ரஷ்ய அதிபர் யெல்ட்சின் வழங்கினார்

(மாஸ்கோ)

ருஷ்யாவில் அவசரகால சட்டத்தைப் பிரகடனம் செய்திருக்கும் பொறிஸ் யெல்ட்சின், கம்யூனிஸ்ட் போக்குடைய ஆயுதக் கிளர்ச்சியாளர்களை முறியடிக்கும்படி தமக்கு விசுவாசமான துருப்புகளுக்கு கட்டளையிட்டுள்ளார்.

நாட்டின் சட்டம், ஒழுங்கு என்பவற்றை மீள நிலைநாட்டுவதாக வாக்குறுதி அளித்துள்ள அதிபர் பொறிஸ் யெல்ட்சின் நெருக்கடி நிலையையும் பிரகடனம் செய்துள்ளார்.

இதேவேளை துணை அதிபர் அலெக்சாண்டர் ருஷ்கோவ் தடை செய்யப்பட்ட பாராளுமன்ற வளாகத்தினுள் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பொதுநலக் குடியரசுகள் யெல்ட்சின் மீது நம்பிக்கை

(கீவ்)

உக்ரையின் உட்பட முன்னாள் சோவியத் யூனியனின் பொதுநலவாயக் குடியரசுகள் பலவும் ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் மீது நம்பிக்கை தெரிவித்துள்ளன அத்துடன் மாஸ்கோவில் வன்முறை மூண்டமைக்கு ஜனநாயக எதிர்ப்பு சக்திகளே காரணம் என்றும் அவை குற்றம் சாட்டியுள்ளன.

மால்டோவ, ஜோர்ஜியா போன்றவையும் கூட அதிபர் யெல்ட்சினின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

## கைதானோர் பாதிப்புறின் கடுமையாக நடக்க நேரிடும்

### அய்டீட்டிற்கு வாசிங்டன் எச்சரிக்கை

(வாசிங்டன்)

சோமாலியாவில் ஜெனரல் மூகமட் பாரா அய்டீட்டின் கிளர்ச்சிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள அமெரிக்கத் துருப்பினரில் எவருக்கேனும் ஏதாவது பாதிப்பு நேரிட்டால் வாசிங்டன் மிகக் கடுமையாக நடக்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம் என்று அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் லெஸ் கஸ்பின் எச்சரிக்கை செய்துள்ளார்.

சோமாலியத் தலைநகர் மொகாடிஸ்யூவிற்கு டாங்கிகள், கவசவாகனங்கள் மற்றும் இருநூறுக்கும் அதிகமான துருப்பினரை அமெரிக்கா அனுப்பி வைத்த பின்னர் செய்தியாளர்களிடையே பேசிய லெஸ் கஸ்பின் இதனைத் தெரிவித்தார்.

சமீபத்தில் நடைபெற்ற சண்டையில் 12 அமெரிக்கத் துருப்பினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயம் அடைந்தது தெரிந்ததே.

### சாம்பியா அதிபர் இந்தியா விஜயம்

சாம்பியாவின் அதிபர் எச். ஜே. ரி.கனுவா இந்தியாவுக்கு விஜயம்செய்துள்ளார்., நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கும் அவருடன் சாம்பியாவின் வெளியுறவு அமைச்சர், வர்த்தக அமைச்சர் ஆகியோரும் விஜயம் செய்துள்ளனர். இந்த விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்குமிடையேயான நட்புறவு பலமடையும் என்று அவர் குடியரசுத்தலைவர் மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

## ஆசிரியர்கள் கௌரவிப்பு

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு புங்குடுதீவு சித்தி விநாயகர் மகாவித்தியாலயம், கமலாம்பிகை வித்தியாலய ஆசிரியர்களை கௌரவிக்கும் வைபவம் இன்று புங்குடுதீவு நயினாதீவு ப. நோ. கூ. சங்கத் தலைவரும், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயலாளருமான திரு. ப. கனகலிங்கம் அவர்கள் தலைமையில் காலை 9 மணிக்கு ஆணைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் நடைபெறும் என பாடசாலை அபிவிருத்திச் சபையினரும் பழையமாணவர் சங்கத்தினரும் அறிவித்துள்ளனர்.


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

நூலக உதவியாளர் தரம் 111 பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1993 - 11 - 01 ஆம் தேதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பளஅளவுத்திட்டம்: ரூபா. 2745 - 10 x 55- 7x65-3750,- (மாதமொன்றிற்கு)

தகைமைகள்:

1. ஐந்து பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க. பொ. த. (சா. த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல்வேண்டும். திறமைச் சித்திகளில் இரண்டு சிங்களம்/தமிழ்/ஆங்கிலமொழி அல்லது இலக்கியத்தில் இருத்தல் வேண்டும்.

அல்லது

2. மூன்று தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்திகளுடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றின் நூலகத்தில் 5 ஆண்டுகள் திருப்திகரமான நிரந்தர சேவை பெற்றிருத்தல் வேண்டும். சித்திகளில் இரண்டு சிங்களம் / தமிழ்/ ஆங்கிலமொழி அல்லது இலக்கியத்தில் இருத்தல் வேண்டும்.

வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

குறிப்பு: நூலகவியல் தகைமைகளையும் அல்


பன்னிரு

வேங்கைகளின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் நேற்று காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

விடுதலைப் புலிகள் மக்கள் தொடர்பாளர் திரு. மறவன் தலைமையில் தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திரு. சங்கர் ஏற்றிவைத்தார். ஈகைச்சுடரை யாழ். மாவட்ட கடற்புலிகள் அரசியற்துறை பொறுப்பாளர் திரு. ஆதவன் ஏற்றிவைக்க கடற்புலிகள் உறுப்பினர் திரு. காமினி தூபிக்கு மாலை அணிவித்தார்

மற்றும் மாவீரர்களான லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா, கப்டன் பழனி, லெப். மிரேஸ், மேஜர் அப்துல்லா, லெப். தவக்குமார், 2ஆம் லெப். ஆனந்தகுமார். 2ஆம் லெப். றெஜினோல்ட், லெப். அன்பழகன், கப்டன் ரகு, கப்டன் ஹரன், கப்டன் நளன் ஆகியோரின் தூபிக்கும் உருவப் படங்களுக்கும் அவர்களது பெற்றோர்கள், உறவினர்கள் மாலை அணிவித்து ஈகைச் சுடரை ஏற்றிவைத்தனர். இந் நினைவு நாள் வைபவத்தின் போது போராளிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

மேலும் தென்மராட்சி பகுதியில் இந்திய இலங்கை அரசுகளின் கூட்டுச்சதிக்குப் பலியான பன்னிரு வேங்கைகளின் நினைவு நாளான நேற்று தென்மராட்சிக் கோட்டத்தில் மிருசுவில் சந்தியிலும், மடத்தடி சந்தியிலும், கைதடி நுணாவில் வைரவர் கோயில் சந்தியிலும் உள்ள இவர்களது நினைவுருவப்படங்களுக்கு காலை மக்கள் உணர்வு பூர்வமான அஞ்சலியினை செலுத்தினர். (க) (யோ) (86)


### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 05-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11060

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்: இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்: 26 9201, 24-6446, 42-2364, 26-1735, 28-9449 40-1516.



### தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாபெரும் இசை நாடக விழா

போர் மேகங்கள் திடீரென எமைச் சூழ்ந்த காரணத்தால் 29-09-93 அன்று நடைபெற இருந்து இடைநிறுத்தப்பட்ட மேற்படி நிகழ்ச்சி நாளை

வியாழக்கிழமை (07-10-1993) அன்று நடைபெறும்.

உயர்தர மாணவர் மன்றம்

(6227)



### கணக்காளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு கணக்காளர் தேவை

தகைமைகள்: இதற்கு முன்னர் தனியார் நிறுவனத்தில் பத்து ஆண்டுகால அனுபவம் நிறைந்தவராகவும், வயதெல்லை 40 க்கும் 50க்கும் உட்பட்டவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

20 - 10 - 1993 க்கு முன்னர் அனுபவச் சான்றின் போட்டோ பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 202

மே/பா ஈழநாதம்


கல்வி மேம்பாட்டு

வித்தியாலய முன்னாள் அதிபர் பண்டிதர் சி. அப்புத்துரை, ஆத்திசூடி வித்தியாலய முன்னாள் அதிபர் கவிஞர் தி. சிவசாமி, சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி ஜெ. கிருஷ்ணசாமி, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய முன்னாள் அதிபர் பண்டிதர் ச. பொன்னுத்துரை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. க. சிதம்பரப்பிள்ளை ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளனர். மேற்படி இதழின் மதிப்புரையை முன்னாள் பாடநூல் எழுத்தாளர் திரு. சு வேலுப்பிள்ளை அவர்களும் நன்றியுரையை ''விளக்கு'' மாத இதழின் ஆசிரியர் திரு. சரவணபவன் (சிற்பி) அவர்களும் ஆற்றவுள்ளனர்.

## இளம் சந்ததியை

ந்தன. அதனால் எம் நாடு 'கல்வி சிறந்த தமிழ் நாடாகவும் 'பல்விதமான கலைகளின் பெருக்கமுள்ள நாடாகவும், பரிணமித்தது. தொடர்ந்து வீதிகள் தோறும் படிப்பகங்களும், பாடசாலைகளும் பெருகின.

கடந்த நானூற்றைம்பது வருட கால அன்னியராட்சி, நமது வரலாற்றை மாற்றிவிட்டது. இதனால் எமது தேசிய உணர்வு மழுங்கிச் சிந்தனை இழந்து, செயலிழந்து வாழ்ந்தோம். தொடர்ந்து எம்மேல் திணிக்கப்பெற்ற கல்விக் கொள்கைகளும், திட்டங்களும் எமது சொத்தாகிய கல்வியின் முழுப்பயனையும் நுகர முடியாமல் எம்மை புறக்கணித்துவிட்டன. எமது ஆசிரியர்களின் நிரம்பிய கல்வி, ஆழமான அறிவு, விரிவான ஆராய்ச்சி, பரந்த மனப்பான்மை உயர்ந்த கொள்கை, சூழ்ந்த பார்வை, தேசிய நோக்கம் முதலிய வற்றிற்கு பொருந்தமான களம் அமைக்கப்பெறவில்லை. மாறி மாறிப் புகுத்தப் பெற்ற கல்வித் திட்டங்கள் நாலு மறிந்து செய்கின்ற நன் நோக்கம் படைத்த நல்லாசிரியர்களின் செயற்பாடுகளுக்கு இடையூறாக இருந்தன.

இன்று தமிழீழத் தேசிய எழுச்சி புத்தார்வம் பெற்றிருக்கிறது. தளர்விலா முயற்சி ததும்பி நிற்கிறது. மக்கள் பயமின்றித் தலைநிமிர்ந்து நிற்கின்றனர். நிறைவினை நோக்கி அவர்கள் கரங்கள் நீளுகின்றன - இங்கு விடுதலையின் ஒளியில் தமிழீழம் கண் மலர வேண்டுமானால் கல்வி பெருக்கெடுத்து ஓடவேண்டும். அறிவாகிய ஆறு தடையின்றிப் பாய்ந்து; இளம் சந்ததியினரை வளமாக்க வேண்டும். இதற்கு ஆசிரியர்களின் சேவை மிக மிக இன்றியமையாததாகும். உலக ஆசிரியர் தினம் கொண்டாடப் பெறும் இந் நாளிலே எமது ஆசிரியர்கள் மாறிவரும் சூழலை மனங் கொண்டு தம்மை இனங்கண்டு உறுதியோடு கல்விப் பணியிற் கருத்தூன்றிச் சமூகத்திற்குப் பொருத்தப்பாடான அறிவறிந்த நெறிதவறா இளஞ்சந்ததியினரை உருவாக்கித் தர வேண்டுமென்று உரிமையோடும் பணிவோடும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

## சதுரங்கச் சுற்றுப்போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழாவுக்கான போட்டிகளில் மாணவர்களுக்கான சதுரங்கச் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

இப் போட்டியில் பங்குபற்றும் மருதனார்மடம், பண்டத்தரிப்புக் கோட்ட மாணவர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குஇன்று காலை8.30 மணிக்கு தமது பொறுப்பாசிரியரோடு வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர். இரு கோட்டத்திற்கான போட்டிகளும் நாளையும் தொடர்ந்து நடைபெறும்.


### நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடாத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி

காலம்: 06-10-93 நேரம்: பி. ப. 3-30 மணி

இடம்: நாவாந்துறை கலைவாணி விளையாட்டு மைதானம்.

கோஷ்டிகள்:

வினாயகர் எதிர் யங்கென்றிஸ்

சென்மேரிஸ் எதிர் பாடுமீன் (6226)


## மரண அறிவித்தல்

## சமாதான முயற்சிக்கு

பயணத்தை தடுத்து நிறுத்தலாம் என்று நம்பியிருந்த சிங்களப்படைத்துறைத்தலைமைக்கு அது இயலாததென்று புரிந்துவிட்டது.

இந்த நிலையில்தான் பெருமெடுப்பிலான ஆகாயத்தாக்குதல்களின் உதவியுடன் டாங்கிகள், கவசவாகனங்கள், பீரங்கிகளின் சகிதம் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள இராணுவத்தையும் பயன்படுத்தி கிளாலியை ஆக்கிரமிக்க சிங்களப்படைத்துறை திட்டமிட்டது.

ஆனால் சிங்களப் படைத்துறை தலைமை எதிர்பார்த்தது போல அப்படை நகர்த்தல் இலகுவாக அமையவில்லை.

இதனால் கிளாலியை படையினர் கைப்பற்றியிருந்தும் நிரந்தரமாகத் தங்கியிருக்க இயலாது ஆனையிறவு தளத்திற்கே பின்வாங்கிவிட்டனர்.

## இனப் படுகொலை மூலம் போராட்டத்தைஒடுக்க திட்டம்

ஆனால் இன்னொரு முனையால் வேறொரு படையெடுப்பை நடத்த சிங்களப்படைகள் ஆயத்தம் செய்கின்றன அதற்காக இருபதாயிரம்துருப்புக்கள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த விதமான ஒரு பெரிய படையெடுப்பு பரந்தளவில் குடாநாடு மீது நடைபெறுமாக இருந்தால் பொதுமக்களை சிங்களப்படையினர் எவ்வாறு வதைப்பர்? என்பதை நினைத்துக்கூட பார்க்க முடியாது.

பல்லாயிரக்கணக்கில் இளைஞர்களையும், இளம்பெண்களையும் கொன்றுகுவிக்க முனைவர். காட்டுமிராண்டித்தனமான படுகொலை முறைகளையும்,சித்திரவதைவடிவங்களையும் பயன்படுத்தி எமது இளம் சந்ததியை அழிக்க முனைவர்.

சிங்களவர்களாலேயே மேற்கொள்ளப்பட்ட ஒரு சாதாரண கிளர்ச்சியை ஒடுக்க அறுபதாயிரம் சிங்கள இளைஞர்-யுவதிகளை கொன்றுகுவித்ததில் பிரதான பாத்திரம் வகித்த சிசில் வைத்தியரத்னாதான் இப்போது இந்த யாழ் குடாநாடு மீதான படையெடுப்பை நடாத்துகின்றார்.

அப்படியாயின் அந்த இராணுவ ஜெனரலின் கட்டளையின் கீழ் செயற்படும் சிங்களப் படைகள் தமிழிளைஞர் யுவதிகளை எப்படி வதைப்பர், படுகொலை செய்வர் என்பதை ஊகித்தறியமுடியும்.

தமிழினப் படுகொலைமூலம் விடுதலைப்போராட்டத்தை ஒடுக்குவதுதான்சிங்களப்படைகளின் திட்டம்.

இத்திட்டத்தின்படிதான் தென் தமிழீழத்தை ஆக்கிரமித்த சிங்களப்படைகள் அங்கே பெருந்தொகையில் தமிழ் மக்களை கொன்றொழித்து அவர்களது பொருளாதார வளங்களை அழித்தொழித்து தீவிரமான முறையில் தமிழினப் படுகொலையை செய்துள்ளன.

அதைத்தான் வடதமிழீழத்திலும் குறிப்பாக யாழ் குடாநாட்டிலும் செய்வதற்கு அரச படைகள் ஆயத்தங்கள் செய்கின்றன.

குடாநாடு சிங்களப்படைகளின் கைகளில் விழுமானால் தென்தமிழீழத்தில் நடந்ததைவிட பன்மடங்கு தொகையில் படுகொலைகளையும் பாலியல் வன்முறைகளையும், சித்திரவதைகளையும் சிங்களப்படைகள் மேற்கொள்ளும் என்பது வெளிப்படை.

## துணிவாகவும் தீவிரமாகவும் செயற்படவேண்டிய நேரம்

எனவே அநியாயமாக-அடிமைகளைப் போல சிங்களப் படைகளின் கைகளால் படுகொலை செய்யப்படுவதைவிட ஆயுதமேந்தி சிங்களப் படைகளுக்கு எதிராகப் போராடுவதன்மூலம் எமது இனத்திற்கு வரவிருக்கும் பேராபத்தைத் தடுத்து நிறுத்த முடியும்.

அதேவேளை பெரும்படையெடுப்பு ஒன்று நடக்கப்போகின்றதே, நாம் கொல்லப்படப்போகின்றோமே, அழிவுகள் வரப்போகின்றனவே, என அச்சத்துடன் மக்கள் முடங்கியிருக்க முனையக்கூடாது. மாறாக, ஒரு தற்காப்பு நடவடிக்கைக்காக எம்மை நாமே தயார்படுத்தத் தொடங்க வேண்டும்.

முன்னரைவிட மிகத் தீவிரமாகவும், துணிவாகவும், தியாகசிந்தையுடனும் செயற்படவேண்டிய நேரம் வந்துவிட்டது.

தம்மையும், தமது குடும்பத்தவர்களையும், தத்தம் ஊர்களையும் சிங்களப்படைகளிடமிருந்து பாதுகாக்க வேண்டிய தேவை மக்கள் எல்லோருக்கும் எழுந்துவிட்டது.

## நம்மை நாமே பாதுகாக்க

சித்திகளில் இரண்டு சிங்களம்/தமிழ்/ஆங்கிலமொழி அல்லது இலக்கியத்தில் இருத்தல் வேண்டும்.

அல்லது

2. மூன்று தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்திகளுடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றின் நூலகத்தில் 5 ஆண்டுகள் திருப்திகரமான நிரந்தர சேவை பெற்றிருத்தல் வேண்டும். சித்திகளில் இரண்டு சிங்களம் / தமிழ்/ ஆங்கிலமொழி அல்லது இலக்கியத்தில் இருத்தல் வேண்டும்.

வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

குறிப்பு: நூலகவியல் தகைமைகளையும் அல்லது நூலக அனுபவத்தையும் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தெரிவு: உளச்சார்பு பரீட்சை மூலமும், நேர்முகப் பரீட்சை மூலமும் நடைபெறும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும்நிதிக் கிளையில் 20/- ரூபாவைச் செலுத்தியபின்னர் சிரேட்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தபால் மூலம் படிவங்களைப் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/ நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23 × 10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவத்தில் அனுப்பப்படும் விண்ணப்பம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல்வேண்டும்.

விண்ணப்பமுடிவு தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் விவரங்கள் தெளிவின்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்;

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-09-28
(சி-7554)

(6227)

# கணக்காளர் தேவை

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு கணக்காளர் தேவை**

தகைமைகள்: இதற்கு முன்னர் தனியார் நிறுவனத்தில் பத்து ஆண்டுகால அனுபவம் நிறைந்தவராகவும், வயதெல்லை 40க்கும் 50க்கும் உட்பட்டவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

20 - 10 - 1993 க்கு முன்னர் அனுபவச் சான்றின் போட்டோ பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 202
மே/பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்

(6219)

**யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்**

# KILLER INSTINCT

**(கொலை வெறி)**

**(முழுநீளத்தாக்குதல் சித்திரம்)**

**தினசரி மாலை 4.00 மணி, 6-00 மணி**

**சனி, ஞாயிறு தினங்களில்**
**காலை 10-30 மணி,**
**மாலை 4-00 மணி, 6-00மணி**

(இ-7352)

முதலிய வற்றிற்கு பொருத்தமான களம் அமைக்கப்பெறவில்லை. மாறி மாறிப் புகுத்தப் பெற்ற கல்வித் திட்டங்கள் நாலு மறிந்து செய்கின்ற

யினரை உருவாக்கித் தர வேண்டுமென்று உரிமையோடும் பணிவோடும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

**நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடாத்தும் 7 பேர் கொண்ட**

# உதைபந்தாட்டப் போட்டி

காலம்: 06-10-93 நேரம்: பி. ப. 3-30 மணி

இடம்: நாவாந்துறை கலைவாணி விளையாட்டு மைதானம்.

கோஷ்டிகள்:

விநாயகர் எதிர் யங்கென்றிஸ்
சென்மேரிஸ் எதிர் பாடுமீன்

(6226)

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு சுப்பிரமணியம்

[மருந்துக்கடை - நல்லூர் மார்க்கெட்]

நல்லூர் வடக்கு கலைமகள் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் மருந்துக்கடை உரிமையாளர் கார்த்திகேசு சுப்பிரமணியம் காலமாகிவிட்டார். இவர் விசயலெட்சுமியின் அன்புக் கணவரும் சந்திரவதனி (அவுஸ்ரேலியா), சந்திரமோகன், முகுந்தன், பாஸ்கரன், தயாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதீஸ்வரன் (அவுஸ்ரேலியா) அவர்களின் அன்பு மாமனாரும் கார்த்திகேசு, பூரணம் ஆகியோரின் அன்பு மகனும் ஐயாத்துரை, சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் இந்திராணி, கணேசலிங்கம் (கணேஸ் ரெக்ஸ்ரைல், நல்லூர் மார்க்கெட்) ஆகியோரின் அன்பு சகோதரனும் திருநாவுக்கரசு (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), கனகாம்பிகை, புலேந்திரன், மகேந்திரன், பாலேந்திரன் (யாழ். மாநகரசபை சித்த வைத்தியப் பிரிவு), மனோகரன் (U. K), திவாகரன், விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் 6.10.93(இன்று) புதன்கிழமை மு. ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா. கணேசலிங்கம்

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(6224)

டுப்பை நடாத்துகின்றார்.

வெளிப்படை.

# துணிவாகவும் தீவிரமாகவும் செயற்படவேண்டிய நேரம்

எனவே அநியாயமாக அடிமைகளைப் போல சிங்களப் படைகளின் கைகளால் படுகொலை செய்யப்படுவதை விட ஆயுதமேந்தி சிங்களப் படைகளுக்கு எதிராகப் போராடுவதன்மூலம் எமது இனத்திற்கு வரவிருக்கும் பேராபத்தைத் தடுத்து நிறுத்த முடியும்.

அதேவேளை பெரும்படையெடுப்பு ஒன்று நடக்கப்போகின்றதே, நாம் கொல்லப்படப்போகின்றோமே, அழிவுகள் வரப்போகின்றனவே, என அச்சத்துடன் மக்கள் முடங்கியிருக்க முனையக்கூடாது. மாறாக, ஒரு தற்காப்பு நடவடிக்கைக்காக எம்மை நாமே தயார்படுத்தத் தொடங்க வேண்டும்.

முன்னரைவிட மிகத் தீவிரமாகவும், துணிவாகவும், தியாகசிந்தையுடனும் செயற்படவேண்டிய நேரம் வந்துவிட்டது.

தம்மையும், தமது குடும்பத்தவர்களையும், தத்தம் ஊர்களையும் சிங்களப்படைகளிடமிருந்து பாதுகாக்க வேண்டிய தேவை மக்கள் எல்லோருக்கும் எழுந்துவிட்டது.

# நம்மை நாமே பாதுகாக்க ஆயுதம் ஏந்தி போரிடுவோம்

இனியும் பேச்சுவார்த்தைகள் என்றும், சமாதான முயற்சிகள் என்றும் வீண்நம்பிக்கைகளுக்குள் எமது மக்கள் அல்லலுறக் கூடாது.

பேச்சும் இல்லை, சமாதானமுயற்சிகளும் இல்லை என்று அரசே திட்டவட்டமாக, வெளிப்படையாக அறிவித்துவிட்டது. படையெடுப்புகள், இராணுவ அணுகுமுறைகள் மூலமே இனப்பிரச்சினையை கையாள அரசும், படைத்துறைத் தலைமையும் ஏகோபித்த முடிவை எடுத்துவிட்டன. இந்தக் கடும்போக்கை சிங்கள தேசத்தின் அனைத்துத் தரப்பினருமே அங்கீகரித்தும் விட்டனர்.

இந்த நிலையில் அமைதி வழிமுறையில் தீர்வு கிடைக்கும் என்ற எண்ணப்பாட்டை கைவிட்டுவிட்டு ஆயுதம் ஏந்திப் போராடி எம்மை நாமே பாதுகாத்துக்கொள்வதுடன் எமது மண்ணையும் எதிரியின் பிடியிலிருந்து விடுவிக்கப் பாடுபடுவோம்.

இந்த உன்னத நோக்கத்திற்காக ஆயுதப் போரில் இணையும்படி எமது இளைஞர்களையும் - இளம் பெண்களையும் நாம் அன்புடன் அழைக்கின்றோம்.

இது ஒரு அவசரமான அழைப்பு.

எமது தாய்த்திருநாட்டின் இந்த அறைகூவலுக்கு உடனடியாகவே செவிசாய்க்கும்படி இந்த மண்ணின் மைந்தர்களை கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழீழ மக்களைப் பொறுத்தளவில் போராடினால்தான் வாழ்வுண்டு.

நாம் இணைந்து போராடி எம்மையும், எமது குடும்பத்தவர்களையும் எமது ஊர்களையும் பாதுகாப்போம்.

# கிளாலி பகுதியில் ஒருவர் இராணுவத்தினரால் கைது?

(தென்மராட்சி)

கிளாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு இடம்பெற்ற வேளையில் குடும்பஸ்தர் ஒருவர் இராணுவத்தினரின் பிடியுள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கடந்த சில தினங்களாக இராணுவத்தினர் கிளாலிப் பகுதிக்கு வந்த வேளை அதை அலட்சியம் செய்து வீட்டில் தங்கியிருந்த எஸ். தேவதாஸ் (வயது50) என்பவரே காணாமல் போனவர் எனத் தெரியவந்துள்ளது.

இவர் பயன்படுத்தும் சைக்கிள் வீட்டிலேயே நிறுத்தப்பட்டுள்ள, போதிலும் இவருக்கு நடந்தது தெரியாது உறவினர் தவிக்கின்றனர்.

# கொடுப்பனவு

[யாழ்ப்பாணம்]

வேலணை ப.நோ.கூ. சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான புரட்டாதி மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு பணமாக வழங்கப்படுகிறது. [88]

**இந்திய இலங்கை கூட்டுச் சதியில் 05. 10. 87-ல் தம் உயிர் ஈந்த**

# பன்னிரு வீரவேங்கைகளிற்கும் ஆறாம் ஆண்டு நினைவஞ்சலிகள்

| | | | |
|---|---|---|---|
| எழிலகம் மணிக்கூட்டு வீதி | யாழ். வணிகமாடம் மருத்துவமனை வீதி | இரும்பு விற்பனை அகம் அர்ச்சுனா வீதி | படமாடம் அர்ச்சுனா வீதி, |
| மின்வளம் கஸ்தூரியார் வீதி | சுவையருவி மின்நிலைய வீதி | இன்சுவை மணிக்கூட்டு வீதி | நீர்நிதி மானிப்பாய் வீதி |
| பசுஞ்சோலை மின்நிலைய வீதி | சுவையருவி நெல்லியடி | மலிவகம் நாவாந்துறை | மலிவகம் பாசையூர் |

[7549]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.